**செய்தி வெளியீடு எண்.392** **நாள் : – 29.6.2007**

# கவிஞர் சாமிபழனியப்பன் மருத்துவச் சிகிச்சைக்கு ஒரு இலட்ச ரூபாய் நிதி உதவி

## முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் மாணவரும், தமிழரசு பத்திரிகையில் ஏற்கனவே பணியாற்றி ஓய்வுபெற்றவருமான, 82 வயதுடைய கவிஞர் சாமிபழனியப்பன், அவர்கள் இருதய கோளாறு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், அவருக்குச் சிகிச்சை தொடரவேண்டி உள்ளதால், தங்கள் குடும்பத்தின் ஏழ்மை நிலையைக் கருத்தில் கொண்டு நிதி உதவி வழங்குமாறு அவரது துணைவியார் அரசுக்கு அளித்துள்ள கோரிக்கை விண்ணப்பித்தினை மிகுந்த பரிவோடு பரிசீலனை செய்து; முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து, ஒரு இலட்ச ரூபாய் நிதியுதவியை, கவிஞர் சாமிபழனியப்பன் அவர்களின் மருத்துவ சிகிச்சைக்காக அவரது மனைவி திருமதி கமலா சாமிபழனியப்பன் மற்றும் அவரது மகள் திருமதி நாகம்மை ஆகியோரிடம் முதலமைச்சர் கலைஞர் இன்று வழங்கினார்.

*****

வெளியீடு:– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9